# மனித உரிமைகளுக்காகன உயர்ஸ்தானிகரால் அவரது இலங்கை விஜயத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கை.

கொழும்பு, 2007 ஒக்டோபர் 13

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு எனக்கு அழைப்பு விடுத்தமைக்காக மேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் எனது நிகழ்ச்சிநிரலை ஏற்பாடு செய்தமைக்காக இலங்கை அரசாங்கத்துக்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன். தமது கருத்துகளை என்னுடன் பகிர்ந்துகொள்வதற்காக தமது நேரத்தை செலவிட்ட அமைச்சர் சமரசிங்ஹ, பல அரச அதிகாரிகள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமயத்தலைவர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் ஐ.நா சகாக்கள் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, தமது சொந்த ஆனுபவங்கள் குறித்து சான்று பத்திரங்களுடன் என்னை நாடி வந்த பல தனிநபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நேற்று நான் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தேன். அங்கு எனது விஜயத்துக்கு ஏற்பாடு செய்தமைக்காக இராணுவ அதிகாரிகளுக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன். யாழ்ப்பாண ஆயருக்கு எனது நன்றிகள் குறிப்பாக உரித்தாகின்றன. அவரது அன்பான வரவேற்பையும் விருந்தோம்பலையும் நான் பெரிதும் மதித்துப் போற்றுகின்றேன்.

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்வதற்கு காலம் என்னை அனுமதிக்காமையையிட்டு நான் வருந்துகிறேன். எனக்கு கிளிநொச்சிக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைக்காமையையிட்டும் நான் கவலையுறுகிறேன். அங்கு சென்றிருப்பின், சிறுவர்களை படையில் சேர்த்துக்கொள்தல், கட்டாய ஆட்சேர்ப்பு, வயது வந்தவர்களைக் கடத்துதல் மற்றும் அரசியல் படுகொலைகள் ஆகியன உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் மனித உரிமை, மனிதாபிமான சட்டங்கள் ஆகியவற்றின் மீறல்கள் பற்றிய எனது ஆழ்ந்த கவலையை அவர்களிடம் நேரடியாகவே அறிவித்திருப்பேன். தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்களினால் புரியப்படும் பாரதூரமான மீறல்கள் தொடர்பாக எனக்குக் கிடைத்திருக்கும் பல அறிக்கைகள் குறித்தும் நான் மிகுந்த கவலை கொண்டுள்ளேன்.

இத்தீவிலுள்ள சகல சமூகத்தினரையும் பாதிக்கின்ற விரிவான மனித உரிமைகள் விடயங்கள், இப்பூசலுடன் தொடர்புபட்ட உடனடி விடயங்கள் மீது கவனமெல்லாம் குவிக்கப்படுவதன் மூலம் பெரிதும் மறைபட்டுக் கிடக்கின்றன என்பதை எனது கலந்துரையாடல்களில் அறிந்து அதிர்ச்சியுற்றேன். பாரபட்சம், ஒதுக்கிவைத்தல், பால்நிலை

சமத்துவமின்மை பொது மற்றும் அரசியல் வாழ்வில் பெண்களின் குறைவான பங்கேற்பு, குடிபெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் ஊடக சுதந்திரம் ஆகிய விடயங்களை இவை உள்ளடக்கும். இச்சவால்கள் எந்தவொரு சமாதான தீர்வுக்கும் முன்னரும் அதற்குப் பின்னரும் இருக்கவே செய்யும். எனவே அவற்றுக்கு கூடுதல் கவனம் செலுத்துவது பொருத்தமானதாகும்.

ஓர் உறுதியான தேசிய பாதுகாப்பு முறைமைக்கு தேவையான பல அம்சங்கள் இலங்கையில் உள்ளன. பெரும்பாலான சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளை இலங்கை ஏற்றங்கீகரித்துள்ளது. அது அதன் அரசியலமைப்பில் நியாயமான மனித உரிமைகள் உத்தரவாதத்தை கொண்டுள்ளது. அதற்கு நீண்ட ஜனநாயக மற்றும் சட்ட பாரம்பரியங்கள் உண்டு. ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக அது தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவொன்றைக் கொண்டுள்ளது. இலங்கைக்கு செயலூக்கம் மிக்க ஓர் ஊடகத்துறை உண்டு. பற்றுறுதியுள்ள சிவில் சமூகமொன்றிடமிருந்தும் அது பயன்பெறுகின்றது.

எனினும், ஓர் ஆயுதப்போராட்டம் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அவசரகால நடவடிக்கைகள் ஆகியன நிலவும் சூழ்நிலையில் சட்டத்தின் ஆட்சியில் ஏற்படும் பலவீனங்களும் குற்றம் புரிபவர்களுக்கு இருக்கும் சட்டப் பாதுகாப்பும் அதிர்ச்சியூட்டுவனவாய் உள்ளன. கண்டுபிடிக்கப்படாதிருக்கும் பெரும் எண்ணிக்கையிலான அறிவிக்கப்பட்ட பல கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமற் போதல்கள் உள்ளன. கண்டுபிடிக்கப்படாத காணாமற்போதல்களின் நீண்ட அதிர்ச்சியூட்டும் அனுபவம் ஒன்றும் அத்தகைய மீறல்களுக்கு எதிராக எவ்வாறு பாதுகாப்பளிப்பது என்பது பற்றி கடந்த கால விசாரணை ஆணைக்குழுவிலிருந்து பல விதப்புரைகளும் நிலவுகின்ற ஒரு நாட்டில் இது குறிப்பாக கவலை அளிப்பதாய் உள்ளது. அரசாங்கம் இப்பிரச்சினைகளைக் கையாள்வதற்கு தான் மேற்கொண்டுள்ள பல முன்னெடுப்புகளை சுட்டிக்காட்டுகின்ற அதேவேளை, இச்சம்பவங்களுள் பெரும்பாலானவற்றுக்கு இதுவரை போதுமானதும் நம்பகரமானதுமான அரசாங்க வகைகூறல் ஒன்று இல்லை. மேலும் தீவிரமான புலன்விசாரணைகளும் வழக்குத் தொடர்தல்களும் குற்றத்தீர்ப்பளித்தல்களும் இல்லாத சூழ்நிலையில் இது எவ்வாறு முடிவுக்கு வரும் என்பதை அறிவது கடினமாகும்.

இலங்கைக்கு தேவையான பெரும்பாலான மனித உரிமைகள் நிறுவனக்கட்டமைப்பு இருக்கின்ற அதேவேளை, பாதுகாத்தல் எனும் முக்கிய அம்சம் சிதைக்கப்பட்டுள்ளது அல்லது விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கைகளை உள்ளூர் சட்டத்தில் பிரயோகித்தலுக்கு சிங்கராசா வழக்கில் உயர்நீதி மன்றத்தினால் சவால் விடுக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினையைக் கையாள்வதற்கு பாராளுமன்றத்தில் இவ்வாரம் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கத்தின் உத்தேச சட்டம் இப்பிரச்சினைகளையும் இடர்களையும்

ஓரளவுக்கே தீர்த்து வைப்பதோடு தேசிய சட்டத்தில் பல்வேறு உரிமைகளின் அந்தஸ்தை மேலும் குழப்பத்திற்கு உள்ளாக்குகின்றது.

எனது கலந்துரையாடல்கள் முழுவதிலும் அரசாங்கப் பிரதிநிதிகள் மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கான தேசிய பொறிமுறைகள் போதுமானவை எனவும் எனினும் அதற்கு திறன் விருத்தியும் சர்வதேச சமூகத்திடமிருந்து மேலும் ஆதரவும் தேவை எனவும் வலியுறுத்தினர். இதற்கு மாறாக பரந்த அரசியல் பின்னணிகளில் இருந்தும் பல்வேறு சமூகங்களிலிருந்துமான மக்கள் மிகவும் பாரதூரமான மனித உரிமைத் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக போதுமானளவு பாதுகாப்பளிப்பதற்கான தற்போதுள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஆற்றலில் தமக்குள்ள நம்பிக்கையின்மையையும் விசுவாசமின்மையையும் என்னிடம் தெரிவித்தனர்.

இந்நிறுவனங்களுள் சில இது தொடர்பாக தமக்குள்ள குறைகளை அவைகளே ஊர்ஜிதப்படுத்தின. ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க அதன் முன் தோற்றுவதற்கு சில அரச உத்தியோகத்தர்கள் தவறியிருந்ததாக அவ்விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் என்னிடம் சுட்டிக்காட்டினர். பயன்மிக்க சாட்சிகளுக்கான உதவிகளும் பாதுகாப்பு முறைமையும் இல்லாதிருப்பது தமது கடமைகளை நிறைவேற்றுவதில் உள்ள ஒரு முக்கிய குறைபாடாகும் என அவர்கள் வலியுறுத்தினர். எனது கருத்தின்படி இவ்வாணைக்குழுவானது பொது விசாரணைகளை நடத்துவதன் மூலம் மேலும் கூடிய பொதுமக்கள் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ளும். எவ்வாறாயினும் இவ்விசாரணை ஆணைக்குழு அதிர்ச்சியூட்டும் பல சம்பவங்களுக்கு பதிற்செயற்பாடாற்றுவதற்கான ஒரு தற்காலிகமான விசேட ஏற்பாடேயாகும். எனவே அது சம்பந்தப்பட்ட சட்டத்தை நிலைநாட்டும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய பயன்மிகு செயற்பாடுகளுக்கு ஒரு பிரதியீடாக அமையக்கூடாது. அத்துடன் அது ஒரு முன்னோக்கிய விரிவான மற்றும் பயனுறுதிமிக்க மனித உரிமைகள் பாதுகாப்பு முறைமைக்கான தேவையிலிருந்து விலகிச்செல்தலும் கூடாது.

மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த காலங்களில் இது தொடர்பாக ஒரு முக்கிய பங்கு வகித்துள்ளது. எனினும், ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள சர்ச்சையை தீர்க்கத் தவறியமையானது, உள்ளூரிலும் சர்வதேச ரீதியாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மீதான நம்பிக்கை நெருக்கடி நிலை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழு முறையாக பொது விசாரணைகளை நடத்தி காலாகாலத்தில் பொது அறிக்கைகளை விடுக்கத்தவறியமை அதன் பயனுறு தன்மையிலும் சுயாதீனத்திலும் உள்ள நம்பிக்கையை மேலும் சிதைவடையச் செய்துள்ளது. உண்மையில் இவ்வகை நிறுவனங்களை நிர்வகிக்கும் சர்வதேச அமைப்பின் அங்கீகாரத்தை இவ்வாணைக்குழு இழந்துவிடக்கூடும்.

எனது கருத்தின்படி இலங்கையில் தற்போது மனித உரிமைகள் பாதுகாப்பில் உள்ள விரிசல் வெறுமனே ஒரு ஆற்றல் பற்றியதொரு விடயமல்ல. குறிப்பிட்ட சில துறைகளில் பயிற்சியும் சர்வதேச நிபுணத்துவமும் தேவைப்படுகின்ற அதேவேளை (இதனை அரசாங்கம் வரவேற்குமென்று நான் நம்புகிறேன்), இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் குறைபாடுகளுள் முக்கியமான ஒன்று, மனித உரிமைகள் துஷ்பிரயோகம் பற்றிய நம்பகரமான குற்றச்சாட்டுகளின் மீது நம்பத்தகுந்ததும் அதிகாரபூர்வமானதுமான தகவல்கள் இல்லாதிருப்பதிலேயே ஆழ வேரூன்றியிருக்கிறது என நான் உறுதிபட நம்புகிறேன்.

விடுதலைப்புலிகள் பிரசார நோக்கங்களுக்காக தகவல்களை துரிதமாகத் தமக்கு வேண்டியவாறு கையாளுகின்றனர் எனப் பலரும் கூறுகின்றனர். எனது கருத்தின்படி இது சுயேச்சையான தகவல் திரட்டலுக்கும் மனித உரிமைகள் விடயம் தொடர்பான பொது அறிக்கையிடலுக்குமான தேவையை வலியுறுத்திநிற்கின்றது.

மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் இவ்வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு உறுதுணை புரிய விரும்புகின்றது. மனித உரிமைகளைப் பாதுகாப்பபதில் சர்வதேச ஆதரவிற்கான தேவை பற்றிய ஓர் முனைப்பான தேசிய விவாதம் நடைபெற்று வருகிறதென்பதை நான் அறிவேன். தற்போது நிகழ்ந்து வரும் அறிக்கையிடப்பட்ட துஷ்பிரயோகங்களின் தீவிரத்தன்மையின் அடிப்படையில், அதிலும் குறிப்பாக ஆட்களின் உயிருக்கும் பாதுகாப்புக்குமான அச்சுறுத்தல்கள் நிலவும் சூழ்நிலைகளில் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான ஆக்கபூர்வமானதோர் உறவின் எதிர்காலம் பற்றிய எமது தற்போதைய கலந்துரையாடல்களை துரிதமாக நாம் தீர்க்க வேண்டுமென நான் நம்புகின்றேன்.

ஓர் இறுதி அவதானிப்பு: காணாமற்போதல்களிலிருந்து சகல ஆட்களும் பாதுகாக்கப்படுவதற்கான புதிய சர்வதேச சமவாயத்தை விரைவாக அரசாங்கம் ஏற்றங்கீகரிப்பதற்கு பரிசீலிப்பது மிகவும் விரும்பத்தக்கதாக அமையும். சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் ஆவணப்படுத்தப்பட்ட மீறல்கள் நிகழ்ந்துள்ள சூழலில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்கும் ரோம் உடன்படிக்கையை ஏற்றங்கீகரித்துள்ள 105 நாடுகளுடன் இலங்கை இணைந்துகொள்வது பற்றி அது தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.